**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.6/2019**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 03 ஆம் நாள் வாதிகள் தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதீப் குமார் | ஜாதி | : | |
| த.பெ | : | சேகர் | தொழில் | : | அரிசி வியாபாரம் |
| கிராமம் | : | வண்ணம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 34/2026 |
| தேதி | : | 03.03.2026 | | | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி சாட்சியம் அளிக்க அழைத்ததால் நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரிதான். வாதி உங்களுக்கு என்ன உறவுமுறை என்றால் தாத்தா உறவுமுறை வேண்டும். வாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள், 2 ஆண் பிள்ளைகள், 1 பெண் பிள்ளை. வாதி மகள் பெயர் நாகரத்தினம் என்றால் சரிதான். நாகரத்தினத்தின் மகள் கவிதாவை தான் நீங்கள் திருமணம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். வாதியின் பேத்தியை நீங்கள் திருமணம் செய்துள்ளதால் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வாதி பிராதில் என்ன விபரம் சொல்லியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வாதியின் பக்கத்து இடத்தில் உள்ள நபர் வாதியின் இடத்திற்குள் வீட்டை 8 அடி உள்புறமமாக ஆக்கிரமித்து கட்டிவிட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எத்தனை அடி ஆக்கிரமித்து வீட்டை கட்டியுள்ளார் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சர்வேயர் தாவா இடத்தை அளந்தபோது நீங்கள்

இருந்தீர்களா என்றால் இருந்தேன். சர்வேயர் அளக்கும்போது நீங்கள் இருந்திருந்தால் ஆக்கிரமிப்பு எவ்வளவு என்று உங்களுக்கு தெரிந்திருக்கும் என்றும், அதை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருப்பீர்கள் என்றும், சர்வேயர் அளக்கும்போது நீங்கள் இல்லாததால் தான் ஆக்கிரமிப்பு பற்றி சரியாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வேயரை வைத்து அளந்தபிறகு வாதி நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் சர்வேயர் இடத்தை அளந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வாதி தான் பிரதிவாதி இடத்திற்குள் ஆக்கிரமித்து கட்டடம் கட்டியுள்ளார் என்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. வாதி தான் பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வேண்டுமேன்றே பிரச்சனை செய்கிறார் என்றால் சரியல்ல. வாதியின் பேத்தியை நீங்கள் திருமணம் செய்திருப்பதால் அவருக்கு ஆதரவாக நீங்கள் அளித்திருக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வாதிக்கும் உங்களுக்கும் உள்ள உறவுமுறையை பற்றி நிரூபண வாக்குமூலத்தில் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor